# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 368/மா/2023**
**நாள் : 23.12.2023**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் 6.11.2023 நாளிட்ட மனு 14.11.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 368/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 06.11.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக்கொண்டு சமூக பணியாற்றி வருகிறேன். சென்னை – 600 079, மண்டலம்- 5, வார்டு-54, சவுக்கார்பேட்டை, தொத்தவால் சாவடி, மின்ட் தெரு, கதவு எண்.196/418 என்ற இடத்தில் திரு. சாந்தி லால் என்பவர் சென்னை மாநகராட்சியிடம் எந்த விதமான கட்டிட அனுமதியில்லாமல் தரைத்தளத்துடன் (G+5) ஐந்து மாடி வணிக கட்டிடம் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-05ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

கடந்த எட்டு வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். தற்போது

30.09.2023 அன்று அளிக்கப்பட்ட புகாருக்கும் இதே பதிலைத்தான் அளித்துள்ளார்கள். அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் கட்டி எட்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் நடவடிக்கைகள் மட்டும் எடுக்கவேயில்லை.

நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரியவருகிறது.

எனவே இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது இணையதள புகார் மனுவின் நகலை (2023-865PTH) இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 12.12.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 5 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. மண்டல அலுவலர் தனது 18.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

- "வார்டு-54க்குட்பட்ட கதவு எண்.196/418, மின்ட் தெருவில் அமைந்துள்ள கட்டிடமானது 2009-2010ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.
- இக்கட்டிடத்திற்கு மதிப்பீடு (எண்.05/054/001526) 2011ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 08.11.2023 அன்று கதவு எண்.196/418 மின்ட் தெரு என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதாக கடிதம் அனுப்பப்பட்டது.
- உயர்நீதி மன்ற வழக்கு எண்.WP. No. 16555 of 2014ன்படி ஜார்ஜ் டவுன் பகுதியில் கட்டப்படும் விதிமீறல் கட்டிடங்களுக்கு CMDA மூலம் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மின்ட் தெருவில் உள்ள கதவு எண்.196/418 என்ற முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு CMDA மூலம் 09.11.2023 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

**2. இம்மனு தொடர்பாக மனுதாரரை 13.12.2023 அன்றும், எதிர்மனுதாரரை 19.12.2023 அன்றும் நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 13.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு 54 சௌக்கார்பேட்டை, மின்ட் தெரு, கதவு எண்.196/418 என்கின்ற இடத்தில் திரு. சாந்திலால் என்பவர் மாநகராட்சி அனுமதியின்றி ஐந்து மாடி வணிகக் கட்டடம் கட்டியுள்ளார். மேற்கண்ட கட்டடம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடம் குறித்து மாநகராட்சியில் புகார் மனு அளித்தும், இதுவரை மாநகராட்சி அலுவலர்களால் நடவடிக்கை எதும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது மாநகராட்சியால் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் செயற் பொறியாளர் 19.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டலம்-5ல் 54வது வார்டுக்குட்பட்ட கதவு எண்.196/418, மின்ட் தெருவில் அமைந்துள்ள கட்டிடமானது 2009–2010 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. உயர்நீதிமன்ற வழக்கு எண் 16555/2014-ன்படி ஜார்ஜ் டவுன் பகுதியில் கட்டப்படும் விதிமீறல் கட்டடங்களுக்கு சி.எம்.டி.ஏ. மூலம் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மேற்கண்ட மின்ட் தெரு கதவு எண் 196/418 என்கின்ற முகவரியில் அமைந்துள்ள அனுமதியற்ற கட்டிடத்தின் மீது Lock and Seal நடவடிக்கை எடுக்கப்பட்டு சி.எம்.டி.ஏ. மூலம் மேற்கண்ட கட்டடம் பூட்டி சீலிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து மேற்கண்ட சி.எம்.டி.ஏ கடிதம் மற்றும் அது தொடர்பான ஆவணங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்."

**இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன:**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5, வார்டு-54 சவுக்கார்பேட்டை, கொத்தவால்சாவடி, மின்ட் தெரு, கதவு எண்.196/418ல் திரு. சாந்திலால் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் அனுமதியில்லாமல் தரைத்தளத்துடன் (G+5) ஐந்து மாடி வணிக கட்டிடம் கட்டியது தொடர்பக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 5ன் அலுவலகத்திற்கு புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதனால், அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், தன் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட விதிமீறல் கட்டடம் 2009-2010ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், அக்கட்டிடத்திற்கு 2011ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA) மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 8.11.2023 அன்று க.எண்.196/418 மின்ட் தெரு என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதாக கடிதம் பெறப்பட்டது என்றும், உயர்நீதிமன்ற வழக்கு எண். WP No.16555 of 2014ன்படி ஜார்ஜ் டவுன் பகுதியில் கட்டப்படும் விதிமீறல் கட்டிடங்களுக்கு (CMDA) மூலம் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், அதன் அடிப்படையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு CMDA மூலம் 9.11.2023 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் செயற்பொறியாளர் தன்னுடைய அறிக்கையிலும் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் அனுமதியின்றி 2009-2010ஆண்டு கட்டப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி 2011-ஆம் ஆண்டு மதிப்பீடு வழங்கப்பட்ட பின்னரும், அனுமதியின்றி கட்டப்பட்ட அக்கட்டிடத்தின் மீது 2023ஆம் ஆண்டு வரை நடவடிக்கை எடுக்காததும், மேலும் வழக்கு எண். WP. No.16555/2014ன்படி மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது 2014ஆம் ஆண்டே நடவடிக்கை எடுக்காததும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலர்கள், அனுமதியின்றி கட்டப்படும் கட்டிட உரிமையாளர்களுடன் கைகோர்த்து செயல்படுவதாக இம்முறைமன்றம் கருதி தன்னுடைய கடுமையான அதிருப்தியை பதிவு செய்கிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx
(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட கட்டடம் 2009-2010ல் அனுமதியின்றி கட்டப்பட்டும் அதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி 2015ல் மதிப்பீடு வழங்கிய பின்னரும், வழக்கு எண்.WP No.16555/2014ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்திரவுபடி மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் குறித்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்துடன் இணைந்து செயல்பட்டு நடவடிக்கை எடுக்காத

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-5ன் சம்மந்தப்பட்ட முன்னாள் மற்றும் இன்னாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. இந்த ஆணையின் நகல் அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளருக்கும் அனுப்பப்படுகிறது. சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இது குறித்து அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. முதன்மைச் செயலர்,
   நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
   62, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம் சென்னை – 600 032